தமிழ்ப் பல்கலைக்கழகச்

செய்திமலர்

திருவள்ளுவராண்டு 2035 சூலை 2004

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் கட்டடப் பணிகள்

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மகளிர்விடுதி, அறிவியல் கட்டடம், குன்றம் கட்டடம் ஆகியவற்றின் முதல்தளக் கட்டடப்பணிகள் பல்கலைக்கழக நல்கைக்குழுவின் அனுமதி பெற்றுத் தொடங்கப்பெற்றன. தமிழக அரசு தனது பங்குத் தொகையாக ரூ.17.66 இலட்சம் நல்கை அளித்துள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் கட்டடப் பணிகள் 25.02.2001 இல் ரூ.74.50 இலட்சம் மதிப்பில் தொழில்நுட்பக் கல்விக் கோட்டம் வழி தொடங்கப்பெற்றன. துணைவேந்தர் அவர்கள் தலைமையில் கட்டடக்குழு வழி உரிய தொடர் நடவடிக்கைகள், தள ஆய்வுகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பெற்று 2003-2004இல் தற்போது நிறைவுற்றுள்ளது.

மகளிர்விடுதி கட்டும்பணிக்கு 100 சதவீதம் ஒதுக்கீடு அளிக்குமாறு தமிழ்ப் பல்கலைக்கழகம் விடுத்த கோரிக்கை, பல்கலைக்கழக நல்கைக்குழுவால் கொள்கையளவில் ஏற்கப்பெற்றுள்ளது. இதன்வழி, தமிழக அரசு நல்கைத் தொகை ரூ.17.66 இலட்சத்தில் கிடைக்கக்கூடிய சேமிப்புத் தொகையில் தத்துவமைய முதுகலை வகுப்பறைக்காக முதல் தள மேற்குப்பகுதிக் கட்டடம் கட்ட முன்முயற்சி மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

சூலை ‘04இல்.....

01.07.2004	-	பேராசிரியர்கள் து.சீனிச்சாமி, எஸ்.பூபதி - பணி நிறைவுவிழா
05.07.2004	-	உலகத்தமிழ்மாநாட்டு மலர் - குழுக்கூட்டம்
06.07.2004	-	பதிப்புத்துறை, அருங்காட்சியகம், சித்தமருத்துவமனை பார்வையிடல்
07.07.2004	-	புலத்தலைவர்கள் கூட்டம்
07,08,09.07.2004	-	அலுவல்துறைகள் - கலந்தாய்வு
13.07.2004	-	பதிப்புத்துறை - கலந்தாய்வு
13.07.2004	-	பொறியியல்பிரிவு - கலந்தாய்வு
20.07.2004	-	துறைத்தலைவர்கள் கூட்டம் எம்.ஏ.எம்பில் வகுப்புகள் பற்றிய கலந்தாய்வு
29.07.2004	-	தமிழ்வளர்ச்சி மற்றும் அறிவியல்தமிழ்த்துறை ஏசுதாசன் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு

நடைபெற்ற நிகழ்வுகள்

உத்திரப் பிரதேச இல்லம்

உத்திரப் பிரதேச அரசு 27.02.1990இல் ரூ.4.00 இலட்சம் நல்கையாக உத்திரப் பிரதேச இல்லம் கட்டுவதற்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்தது. பல ஆண்டுகளாகச் செயற்படுத்தப்படாமலிருந்த இப்பணிக்கு 29.09.1997இல் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்றது. இருப்பினும், நிதிநிலை காரணமாக இப்பணி மேற்கொள்ளப்பெறவில்லை. உத்திரப் பிரதேச அரசுக்குப் பயன்பாட்டுச் சான்றிதழ் அனுப்புவதோடு மட்டுமின்றித் தணிக்கைத் தடைகளை அகற்றும் முகமாக உத்திரப் பிரதேச இல்லம் கட்டும்பணிக்கு 09.04.2003இல் அனுமதி வழங்கப்பெற்றது. உத்திரப் பிரதேச அரசு அளித்த ரூ.4.00 இலட்சத்துடன் தமிழ்ப் பல்கலைக்கழகப் பங்களிப்பாக ரூ.3.00 இலட்சமும் சேர்க்கப்பெற்று, இப்பணி நிறைவுற்று இசைத்துறைப் பயன்பாட்டிற்காக இக்கல்வியாண்டில் கொண்டு வரப்பெறுகிறது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் வளாக மேம்பாட்டுப் பணிகள்

பல்கலைக்கழக நல்கைக் குழுவால் ரூ.75.00 இலட்சம் தமிழ்ப் பல்கலைக்கழகப் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பெற்றுள்ளது.

ஆடவர் விடுதியில் துயில்கூடம் அமைக்கவும், சோழன் பெருவாயில்-மான் பூங்காப் பகுதியில் சுற்றுச்சுவர் கட்டவும், குடியிருப்பு வளாகம் - நிருவாக வளாகத்தில் இரண்டு ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கவும், குடியிருப்பு வளாகத்தில் சாலைகள் அமைக்கவும், மகளிர் விடுதியில் சுற்றுச்சுவர் அமைத்துக் காவல்அறை கட்டவும், உயரழுத்த மின் நிலையச் சிறப்புச் சீர்காப்புப் பணி மேற்கொண்டு அரசு மின் ஆய்வாளரின் தடைக்குறிப்புகளை நீக்கி முறையான அனுமதி பெறவும், தெரு விளக்குகள் புதிதாக மாற்றி அமைக்கவும், அலுவலகக் கட்டடத்தில் இடிதாங்கி அமைப்பு ஏற்படுத்தவும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளைப் புனரமைக்கவும், நூலகம், புலவிருந்தகம், ஓலைச்சுவடித்துறை உள்ளிட்ட கட்டடங்களில் கரையான் எதிர்ப்புக் காப்புப்பணி மேற்கொள்ளவும், கடந்த இருபது ஆண்டுகளாக வேலி அமைக்கப்படாமல் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழக நிலப்பகுதிகளுக்குப் புதிதாக வேலியமைக்கவும், வளாக வடதிசைப் பகுதியில் வேலிகளைச் சீர்செய்யவும் வழிவகை செய்யப்பெற்றுள்ளது. பணியின் அவசியம் கருதி ஆழ்குழாய் கிணறுகள் இரண்டினை அமைக்கவும், மின்நிலைய சீர்காப்புக்கும் ரூ.8.75 இலட்சம் மதிப்பில் அரசின் தொழில்நுட்பக் கல்விக்கோட்டம் வழிப் பணிகள் தொடங்கப்பெற்றுள்ளன. இவையன்றி, அரண்மனை வளாக அச்சக-பதிப்புத்துறைக் கட்டடத்திற்குச் சிறப்புச் சீர்காப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.7.70 இலட்சம் மதிப்பீடு பல்கலைக்கழக நல்கைக்குழுவிற்கு அனுப்பப்பெற்று அனுமதி எதிர்நோக்கப்பெறுகிறது.

ஆடவர்விடுதியில் ரூ.1,15,000/- மதிப்பில் தொழில் நுட்பக் கல்விக்கோட்டம் வழி சிறப்புச் சீர்காப்புப் பணிகள் மேற்கொள்ளப்பெற்று, புதுப்பொலிவுடன் மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஆடவர் விடுதி இக்கல்வியாண்டில் கொண்டுவரப்பெற்றுள்ளது.

– பொறியியல் பிரிவு, தமிழ்ப் பல்கலைக்கழகம்

ஏசுதாசன் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல்தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் முனைவர் ஏசுதாசன் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு 28.07.2004 அன்று மொழிப்புலக் கருத்தரங்க அறையில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் நடைபெற்றது. துணைவேந்தர் தம் தலைமையுரையில், "அறிவியல், அண்மைக் கால வளர்ச்சியாக இருப்பினும் பழங்காலத்தில் தொழில்நுட்பங்கள் சிறந்திருந்தமைக்கான சான்றுகள் பல இருப்பதாகத் தெரிவித்தார். சிந்துவெளி நாகரிகத்தில் மிகச் சிறந்த கட்டுமானங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சிந்துவெளியில் கிடைத்த முத்திரையில் 'இட்டிகை' என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. இது செங்கல்லைக் குறிப்பதாகும். இது ஒரு திராவிடச் சொல்லாகும். இட்டிகை என்னும் சொல் அகநானூற்றிலும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு தொழில் கலைச்சொற்கள் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. சேனாவரையர் தம் உரையில் குறிப்பிடும் 'வாய்ச்சி' என்னும் சொல் மரத்தைச் செதுக்கப் பயன்படும் ஒரு கருவியைக் குறிக்கிறது. மேலும் கொடுமணல், தான்றிக்குடி அகழாய்வுகளில் பல்வேறு பொருட்கள் கிடைத்துள்ளன. இவை பழங்காலத்தில் உயர்ந்த தொழில்நுட்பக் கருவிகள் இருந்தமையை நமக்கு உணர்த்துகின்றன" எனத் தம் உரையில் குறிப்பிட்டார். சொற்பொழிவாளர் தமிழ்ப்பொறியாளர் சு.குழந்தைவேல் அவர்கள், "பண்டைய தமிழரின் கட்டுமானப் பொறியியல் நுட்பங்கள்" என்னும் பொருண்மையில் சொற்பொழிவாற்றினார்கள். அவர், "தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ள கட்டுமான நுட்பங்கள் குறித்துத் தெளிவாக விளக்கினார். மாணிக்க வாசகரின் திருவாசகத்தில் இடம்பெற்றுள்ள பாசன மேலாண்மை குறித்த கருத்துகளைக் குறிப்பிட்டார். தொல்காப்பியத்தில் 'கற்சிறை' என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. இது நீரை வெளியேற்றும் ஒரு கட்டுமானத் தொழில் நுட்பமாகும். 'உச்சக்கோல்' என்னும் நாட்டுப்புறப் பாடல் கல்லணையின் குறுக்குவெட்டுத் தோற்றத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. கல்லணை நேர்கோட்டில் இராது வளைந்து காணப்படும். இது ஒருவகையான தொழில் நுட்பமாகும். கல்லணையின் பக்கவாட்டுச் சரிவு தொழில் நுட்பத்திறனுடன் அமைக்கப்பட்டுள்ளது. ஏரி கட்டியது பற்றியும் ஏரிப் பாசனம் குறித்தும் பல்வேறு கல்வெட்டுச் செய்திகள் உள்ளன. ஒரு அணையில் எந்த அளவு நீரை வெளியேற்றி அணையைக் காக்கவேண்டும் என்னும் தொழில்நுட்பம் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. 216 அடி உயரமுடைய பெரியகோயிலைக் கட்டுவதற்கு மிகப்பெரிய தொழில்நுட்ப வல்லுநர்கள் திட்டமிட்டுச் செயல்பட்டுள்ளனர். சாரங்கள் கட்டும் நுட்பம், கற்களைக் கோர்வையாக இணைக்கும் நுட்பம் எனத் தனித்தனியாகத் தொழில்நுட்பங்கள் சிறந்திருந்தமையைக் காணமுடிகிறது" எனத் தம் உரையில் பல்வேறு கருத்துகளைச் சான்றுகளுடன் குறிப்பிட்டார். முன்னதாக அறிவியல் தமிழ்வளர்ச்சித்துறையின் தலைவர் பேராசிரியர் கு.அண்ணாதுரை வரவேற்புரையாற்றினார். முனைவர் பெ.துரைசாமி நன்றி கூறினார்.

- கு.அண்ணாதுரை
அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை

இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களுக்கான தமிழ்ப் பயிற்சி வகுப்பு

தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியும், தமிழக அரசு நிர்வாகச் சீர்திருத்தத்துறையும் இணைந்து 2004 சூலை 22 முதல் ஆகஸ்டு 11 வரை 21நாட்கள் இந்தியத் தகுதி காண்பருவ ஆட்சிப் பணி அலுவலருக்கான சிறப்புத் தமிழ்ப்பயிற்சி வகுப்பினை நடத்தியது. இப்பயிற்சி வகுப்பில் தமிழ் எழுத்துக்கள் அறிமுகம், இலக்கணம், மரபுத் தொடர்கள், சொற்கள் உருவாக்குதல், குறிப்பு எடுத்தல், உரையாடல், மொழிபெயர்ப்பு, கட்டுரை எழுதுதல், கையெழுத்துப் பயிற்சி, வாசித்தல், பேசுதல் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இப்பயிற்சியின்போது நான்கு ஆட்சிப்பணி அலுவலர்களுக்கு 90 மணிநேர வகுப்புகள் நமது பல்கலைக்கழகத்தின் 5 பேராசிரியர்களைக் கொண்டு மேற்கூறப்பட்ட சிறப்புப் பயிற்சிகளையும், துறையின் கணிப்பொறி மூலம் தமிழ் கற்பித்தலுக்கான மென்தகட்டினைப் (செந்தமிழ் CD) பயன்படுத்தியும் தமிழ் கற்பிக்கப்பட்டது. மேலும் தொடக்க நாளான 22.08.2004 அன்று முன்னறி தேர்வும் (Pre-Test) இறுதி நாளன்று திறமைத் தேர்வும் (Post Test) நடத்தப்பட்டன.

இப்பயிற்சி வகுப்பில் திரு அருண்ராய், இ.ஆ.ப.உதவி ஆட்சியர் (பயிற்சி) தூத்துக்குடி மாவட்டம்; திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப.உதவி ஆட்சியர் (பயிற்சி) கடலூர் மாவட்டம்; டாக்டர். இரா. ஆனந்த குமார், இ.ஆ.ப.உதவி ஆட்சியர் (பயிற்சி), புதுக்கோட்டை மாவட்டம்; டாக்டர் பிங்கி ஜோயல், இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஆகிய 4 இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சி வகுப்பின் இயக்குநராக இந்திய மொழிகள் பள்ளித் துறைத்தலைவர் முனைவர்

வே.சா.அருள்ராஜ் அவர்களும், ஒருங்கிணைப்பாளராக முனைவர் இரா.முரளிதரன் அவர்களும் செயல்பட்டனர். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முனைவர் ஆ.கார்த்திகேயன், அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை, முனைவர் சா.இராதாகிருட்டிணன், மொழிபெயர்ப்புத்துறை, முனைவர் எச்.சித்திரபுத்திரன், அகராதியியல் துறை ஆகியோர் பயிற்றுநர்களாகச் செயல்பட்டனர்.

- வே.சா.அருள்ராஜ், இந்திய மொழிகள் பள்ளி

தமிழ்ப் பல்கலைக்கழகம் - அண்மைவெளியீடுகள்

2001

1. தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும்
   பதிப்பாசிரியர்.எ.சுப்பராயலு,செ.இராசு — ரூ.120-00
   2001, 1/8 டிம்மி பக்கம் 230
2. சங்க கால அரச வரலாறு — ரூ.210.00
   வ.குருநாதன்
   2001, 1/8 டிம்மி பக்கம் 422
3. தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் — ரூ.320.00
   ச.இராசேந்திரன்
   2001, 1/8 டிம்மி பக்கம் 622
4. திருநாவுக்கரசர் தேவாரப் பாடல்களில் இசை — ரூ.140.00
   இ.அங்கயற்கண்ணி
   2001, 1/8 டிம்மி பக்கம் 240
5. இசைத் தமிழ் வரலாறு தொகுதி-3 — ரூ.200.00
   து.ஆ.தனபாண்டியன்
   2001, 1/8 டிம்மி பக்கம் 394
6. நான்மணிக்கடிகை மூலமும் உரையும் — ரூ.130.00
   (ப.ஆர்)வே.இரா.மாதவன்
   2001, 1/8 டிம்மி பக்கம் 238
7. பொதுமக்களுக்கான மருத்துவ நூல்கள் ஓர்ஆய்வு — ரூ.90.00
   நே.சோசப்
   2001, 1/8 டிம்மி பக்கம் 156
8. நாட்டுப்புற மருத்துவம் ஓர் ஆய்வு — ரூ.175.00
   க.சாந்தி
   2001, 1/8 டிம்மி பக்கம் 320
9. குறும்பர்களின் உறவுமுறை — ரூ. 90.00
   தா.இராபர்ட் சத்தியசோசப்
   2001, 1/8 டிம்மி பக்கம் 160
10. சேலம் நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள் — ரூ.280.00
    (ப.ஆர்.)அ.கிருட்டிணன்
    2001, 1/4 கிரவுன் பக்கம் 29
11. வரலாற்று நோக்கில் சங்க இலக்கியப் பழமரபுக் கதைகளும் தொன்மங்களும் — ரூ.320.00
    பெ.மாதையன்
    2001, 1/4 கிரவுன் பக்கம் 362
12. Temples of Nannilam Taluk (an Iconographical Masterpieces)
    A.Velusamy Suthanthiran — ரூ.200.00
    1/8 டிம்மி பக்கம் 390
13. A Historical study of Old Tamil Syntax — ரூ.170.00
    M.Suseela
    1/8 டிம்மி பக்கம் 338
14. Communication, Language and Development — ரூ.150.00
    V.Chidambaranatha pillai
    2001, 1/8 டிம்மி பக்கம் 292
15. அறிவியல் களஞ்சியம் தொகுதி 11 — ரூ.500.00
    முதன்மைப் பதிப்பாசிரியர் (பொறுப்பு) : நே.சோசப்,
    பொறுப்பாசிரியர்: எம்.எஸ்.கோவிந்தசாமி
    2001, 1/4 டிம்மி பக்கம் 900

மறுபதிப்பு நூல்கள்

1. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி - 2
   முதன்மைப் பதிப்பாசிரியர்: நா.பாலுசாமி — ரூ.500.00
2. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி-1 — ரூ.400.00
   பதிப்பாசிரியர்.இரா.சாரங்கபாணி
   2001, 1/4 டிம்மி பக்கம் 562
3. சட்டத் தமிழ் அகராதி — ரூ.200.00
   மா.சண்முகசுப்பிரமணியன்
   2001, 1/4 டிம்மி பக்கம் 488
4. பாரதி பாடல்கள் ஆய்வுப்பதிப்பு — ரூ.200.00
   பதிப்பாசிரியர். ம.ரா.போ.குருசாமி
   2001, 1/8 டிம்மி பக்கம் 1326

2002

1. பாரதி பற்றிய எதிர்கால ஆய்வுகள் — ரூ.20.00
   தி.ந.இராமச்சந்திரன்
   2002, 1/8 டிம்மி பக்கம் 48
2. பாரதியின் கவித்துவம் — ரூ.20.00
   2002, 1/8 டிம்மி பக்கம் 48
3. இரும்புத்தொழில் கலைச்சொல்லகராதி — ரூ.55.00
   வே.சா.அருள்ராஜ்
   2002, 1/8 டிம்மி பக்கம் 152
4. சமூகவியல் மற்றும் மானிடவியல் விளக்க அகராதி — ரூ.95.00
   தா.இராபர்ட் சத்திய சோசப்
   2002, 1/8 டிம்மி பக்கம் 304
5. தொழில் கலைச்சொல்லகராதி — ரூ.80.00
   தொகுப்பாசிரியர்கள் : எச்.சித்திரபுத்திரன்
   இரா.திருநாவுக்கரசு, மா.பார்வதியம்மாள்
   2002, 1/8 டிம்மி பக்கம் 230
6. மருத்துவக் கலைச்சொற்கள் — ரூ.110.00
   தொகுப்பாசிரியர் : நே.சோசப்
   2002, 1/8 டிம்மி பக்கம் 236
7. அருங்கலைச்சொல் அகரமுதலி — ரூ.600.00
   ப.அருளி
   2002, 1/4 டிம்மி பக்கம் 1312
8. பெருஞ்சொல்லகராதி தொகுதி 4 — ரூ. 250.00
   முதன்மைப் பதிப்பாசிரியர்: பெ.மாதையன்
   2002, 1/4 டிம்மி பக்கம் 504
9. அம்மன் வழிபாட்டுச் சடங்குகளில் நாடகக்கூறுகள் — ரூ.110.00
   இரா.இராசு
   2002, 1/8 டிம்மி பக்கம் 206
10. அறிவியல் களஞ்சியம் தொகுதி - 11 — ரூ.500.00
    முதன்மைப் பதிப்பாசிரியர்: கே.கே.அருணாசலம்
    எம்.எஸ்.கோவிந்தசாமி
    2002, 1/8 டிம்மி பக்கம் 992
11. அறிவியல் களஞ்சியம் தொகுதி -12 — ரூ.500.00
    முதன்மைப் பதிப்பாசிரியர்: கே.கே.அருணாசலம்,
    எம்.எஸ்.கோவிந்தசாமி மற்றும் நே.சோசப்
    2002, 1/8 டிம்மி பக்கம் 992
12. தம்மபதம் — ரூ.190.00
    நா.ஜெயப்பிரகாசு
    2002, 1/8 டிம்மி பக்கம் 380
13. உடற்கூறு பகுதி 2 (வயிறும் கானுறுப்புகளும்) — ரூ.200.00
    மருத்துவர்.நா.கிருஷ்ணமூர்த்தி,
    2002, 1/8 டிம்மி பக்கம் 670
14. இயந்திரவியல் இயந்திரப் பொறியியல் கலைச்சொற்கள்
    இராதா.செல்லப்பன் — ரூ. 75.00
    2002, 1/8 டிம்மி பக்கம் 256
15. மின்னியல் மற்றும் மின்னணுவியல் கலைச்சொற்கள்
    இராதா.செல்லப்பன் — ரூ.65.00
    2002, 1/8 டிம்மி பக்கம் 210
16. சைவசித்தாந்த சாத்திர வரலாறு — ரூ.200.00
    க.வெள்ளைவாரணனார்
    2002, 1/8 டிம்மி பக்கம் 840
17. திருமந்திரத்திற் காணும் சமயக் கலைச்சொல்விளக்கம்
    அ.மா.பரிமணம் — ரூ. 80.00
    2002, 1/8 டிம்மி பக்கம் 80

மறுபதிப்பு நூல்கள்

1. சட்டவியல்
   மா.சண்முகசுப்பிரமணியன் — ரூ.100.00
   2002, 1/8 டிம்மி பக்கம் 434

தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

2003

1. அறிவியல் களஞ்சியம் தொகுதி-13 ரூ.700.00
முதன்மைப்பதிப்பாசிரியர்
பேரா.எம்.எஸ்.கோவிந்தசாமி(ஓய்வு)
முனைவர் நே.சோசப்
2003, 1/4 டிம்மி பக்கம் 966
2. பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும் -பாரதிதாசனும் மொழிபெயர்ப்பும் ரூ. 30.00
முனைவர் ப.மருதநாயகம், கவிஞர் பொன்னடியான்
2003, 1/8 டிம்மி பக்கம் 74
3. பழந்தமிழ்த் தொடரியல் வரலாற்று ஆய்வு ரூ. 70.00
முனைவர் ம.சுசீலா
2003, 1/8 டிம்மி பக்கம் 242
4. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொ.5. ரூ.150.00
அறிஞர் எட்கர் தர்ஸ்டன்,
முனைவர் க.ரத்னம்-தமிழாக்கம்
2003,1/4 டிம்மி பக்கம் 496
5. உயிர் வேதியியல் ரூ.270.00
டாக்டர் சி.இராமகிருஷ்ணன்
2003, 1/8 டிம்மி பக்கம் 965
6. குழந்தை நல மருத்துவம் தொகுதி 1 ரூ.210.00
டாக்டர் ஞா.இராஜராஜேஸ்வரி, டாக்டர் அ.ஜெகதீசன்
2003, 1/8 டிம்மி பக்கம் 826
7. குழந்தை நல மருத்துவம் தொகுதி 2 ரூ.170.00
2003, 1/8 டிம்மி பக்கம் 648
8. திருமுறைத் திருநெறி ரூ.105.00
சி.அருணைவடிவேலு முதலியார்
2003, 1/8 டிம்மி பக்கம் 400
9. தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் ரூ.85.00
ம.சா.அறிவுடைநம்பி
2003, 1/8 டிம்மி பக்கம் 304
10. வைத்திய சிந்தாமணி ரூ.80.00
வே.இரா.மாதவன்
2003, 1/8 டிம்மி பக்கம் 276
11. அயல்நாட்டவர்க்குத் தமிழ்க் கருத்துப் பரிமாற்ற இலக்கணம் ரூ.70.00
ஆ.கார்த்திகேயன்
2003, 1/8 டிம்மி பக்கம் 236
12. சுந்தரர் தேவாரப் பாடல்களில் இசை ரூ.70.00
இ.அங்கயற்கண்ணி
2003, 1/8 டிம்மி பக்கம் 232
13. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொ.6 ரூ.150.00
அறிஞர் எட்கர் தர்ஸ்டன், க.ரத்னம் (தமிழாக்கம்)
2003, 1/8 டிம்மி பக்கம் 524

மறுபதிப்பு நூல்கள்

1. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி 2 ரூ.400.00
2003, 1/4 டிம்மி பக்கம் 612
2. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 5 ரூ.700.00
2003, 1/4 டிம்மி பக்கம் 1028
3.வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 6 ரூ.700.00
2003, 1/4 டிம்மி பக்கம் 1022
4.வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 7 ரூ.700.00
2003, 1/4 டிம்மி பக்கம் 1052
5. அருங்கலைச்சொல் அகரமுதலி (மீள்பதிப்பு) ரூ.600.00
2003, 1/4 டிம்மி பக்கம் 1312
6. சைவசித்தாந்த சாத்திர வரலாறு ரூ.200.00
2003, 1/8 டிம்மி பக்கம் 840

சூன் '04 இல் ..... முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

ஆய்வாளர் பெயர் / துறை	தலைப்பு	வாய்மொழித் தேர்வு நடைபெற்ற நாள்
1.செல்வி அருண்மொழிச்செல்வி தத்துவ மையம்	புதுக்கவிதைகளில் மனித நேயம்	08.07.2004

- தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

பாராட்டு

தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை இணைப் பேராசிரியரும் பதிப்புத்துறை இயக்குநர் பொறுப்பு வகிப்பவருமான முனைவர் ஆறு.இராமநாதன் எழுதிய 'நொண்டிப்பிள்ளையார்' என்னும் சிறுகதை, நன்னன் அண்ணல் நினைவுப் பரிசுப்போட்டியில் இரண்டாம் பரிசினைப் பெற்றுள்ளது. பரிசுத்தொகை ரூ.ஆறாயிரம், பல்கலைக்கழகத்தின் சார்பில் ஆசிரியருக்கு இனிய பாராட்டுதல்கள்.

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
- முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்